# கொம்கேர்
# நிதி உதவி

ComCare | MSF
Social Service Office

கொம்கேர் (ComCare) திட்டமானது நிதி உதவி தேவைப்படும் சிங்கப்பூரர்களுக்கு உணவு, போக்குவரத்து, வீட்டுக் கட்டணங்கள் உள்ளிட்ட அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவி வழங்குகிறது.

## விண்ணப்பிக்கும் முறை

**இணையவழி மூலம் எந்நேரத்திலும் தாங்கள் விண்ணப்பிக்கலாம்.**

**1**



Support-Go-Where (go.gov.sg/smta) இணையதளத்திற்குச் சென்று உங்கள் சிங்பாஸ் (Singpass) மூலம் உள்நுழையவும்.

**2**




தாங்களும் தங்களது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் புதுப்பிக்கப்பட்ட வங்கிப் புத்தகங்கள் அல்லது வங்கி அறிக்கைகளை* சமர்ப்பிக்கவும். பெயர்கள் மற்றும் வங்கிக் கணக்கு எண்கள் தெளிவாகக் காண்பிக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்து கொள்ளவும்.

*இவை, குறைந்தபட்சம் சமீபத்திய ஒரு மாத பரிவர்த்தனை விவரங்களையும் வங்கி இருப்பையும் காட்ட வேண்டும்.

**3**




மதிப்பீட்டிற்காக அதிகாரி தங்களைத் தொடர்பு கொள்வார். கூடுதல் ஆவணங்கள்*, கோரப்படலாம்.

*இவற்றில் தங்களது குடும்ப உறுப்பினர்களின் அடையாள ஆவணங்கள், வீட்டு வாடகை, பயனீட்டுக் கட்டணம், சேவை மற்றும் பராமரிப்புக் கட்டணம், மருத்துவச் சான்றிதழ்கள், பணி நியமனக் கடிதங்கள் அல்லது ஊதியச் சீட்டுகள், மற்றும் வேலைவாய்ப்புத் தேடல் முயற்சிகளுக்கான ஆதாரச் சான்றுகள் உள்ளடங்கும்.

### முக்கிய குறிப்பு:

அனைத்து விண்ணப்பதாரர்களும் தாங்கள் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட தகவல்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த பொறுப்புறுதிக் கடிதத்திற்கு இணங்க வேண்டும். அவசியமெனில், தங்களது குடும்பச் சூழ்நிலைக் குறித்த சுய உறுதிமொழியையும் அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படலாம். பொய்யான தகவல்களை அளிப்பதோ அல்லது முக்கிய விவரங்களை மறைப்பதோ சட்ட நடவடிக்கைக்கு வழிவகுக்கும்.

## அடுத்த படிநிலைகள்


**1**

தங்களது அதிகாரி தங்களுடன் இணைந்து, தங்களது சூழ்நிலையை மேம்படுத்துவதற்கான செயல் திட்டத்தை* வகுப்பார்.

மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளுக்கான சில உதாரணங்கள்:

- வேலைவாய்ப்புத் தேடல்
- வளர்ந்த பிள்ளைகளின் ஆதரவைப் பெறுதல், அல்லது
- தங்கள் குழந்தையை குழந்தைப் பராமரிப்பு மையத்தில் பதிவு செய்தல்

*தாங்கள் செயல்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்காவிடில், தங்களது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படாமல் போகலாம்.



**2**

தங்களின் முழுமையான ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட நாளிலிருந்து நான்கு முதல் ஆறு வாரங்களுக்குள் தங்களது விண்ணப்பம் பரிசீலிக்கப்படும். விண்ணப்பத்தின் முடிவு தங்களுக்கு குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கப்படும். பின்னர், தங்களது வீட்டு முகவரிக்கு தபால் மூலம் கடிதம் அனுப்பப்படும். மேலும் தங்களது விண்ணப்ப நிலையை Support-Go-Where இணையதளத்திலும் காணலாம்.

*ஆதரவு பெறும் காலத்தில், ஒப்புக்கொண்ட செயல்திட்டத்தை தாங்கள் பின்பற்றுவது கண்காணிக்கப்படும். தாங்கள் செயல்திட்டத்தைப் பின்பற்றத் தவறினால், தங்களுக்கான உதவி நிறுத்தி வைக்கப்படலாம், குறைக்கப்படலாம் அல்லது முற்றிலும் நிறுத்தப்படலாம்.




**கூடுதல் தகவல்களுக்கு, பின்வரும் இணையதளங்களைப் பார்வையிடவும்:**

msf.gov.sg/comcare | go.gov.sg/smta